நல்லூர் ... லகம்
... மன்றம்
யாழ்ப்பாணம்

# முரசொலி

பக்கங்கள் ஆறு — விலை ரூபா 5.00

முரசு ... ஒலி 19 பிரசோற்பத்தி பங்குனி 12 (25.03.1992) புதன்

## வீதியால் சென்ற நாய்கள் வீட்டில் நுழைந்து கடித்தன

திருநெல்வேலியிலும், பாஷையூரிலும் நேற்று வீதியால் சென்ற விசர் நாய்கள் வீட்டில் இருந்தவர்களைத்தேடி வந்து கடித்துள்ளன. இந் நாய்கள் வீதியால் சைக்கிளில் வந்தவர்களையும் துரத்தியதாகவும், பின்னர் சைக்கிள் ரயரைக்கடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்நாய்களும் பின்னர் பொதுமக்களால் அடித்துக் கொல்லப்பட்டன. கடியினால் காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர். 07

## சிலாவத்துறை படையினர் முயற்சியும் முறியடிப்பு

மன்னார் சிலாவத்துறை இராணுவமுகாமிலிருந்து நேற்று வெளியேறிய இராணுவத்தினர் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி மீண்டும் முகாமிற்கு பின்வாங்கினர். நேற்றுக்காலை 8 30 மணியளவில் சிலாவத்துறை முகாமிலிருந்து கவச வாகனங்கள் சகிதம் இராணுவ அணியொன்று வெளியேறியது இந்த இராணுவ அணியை அகத்திமுறிப்புச்சந்தியில் வழிமறித்து புலிகள் கடும் தாக்குதலை ஆரம்பித்தனர் இதனால் படையினர் தொடர்ந்து முன்னேற முடியாது அகத்திமுறிப்பிலேயே தங்கினர் தரித்து நின்றபடையினர் மீதும் புலிகள் இடைவிடாது தாக்குதலை நடத்தியவண்ணமிருந்தனர் இன்னாள் மாலை 3 மணியளவில் படையினர் பின்வாங்கி சிலாவத்துறை முகாமிற்கு சென்று விட்டனர் இத்தாக்குதல் சம்பவங்களின்போது 2-ம் லெப் மதுரலிங்கம் வீரச்சாவு எய்தினார் படையினர் தரப்பு சேதம் தெரியவரவில்லை மன்னாரில் இராணுவ முகாம்களில் இராணுவம் குவிக்கப்பட்டமை குறித்து முரசொலி செய்தி வெளியிட்டிருந்தமை நினைவுருக்கலாம்.

## பொட்டம்மானைக் கைதுசெய்ய ஸ்ரீலங்கா பொலிஸ் உஷாராம்!

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன கொல்லப்படக் காரணமாக இருந்த குண்டு வெடிப்பு கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்பு ஆகியவை தொடர்பாக புலிகளின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் தொடர்பாகப் பொலிஸார் உஷார் படுத்தப் பட்டுள்ளனராம்.

இவரையும் புலிகளின் வெடிகுண்டு நிபுணர்கள் எனக் கருதப்படும் ரவிகுமார். ரவிசந்திரன் ஆகியோரையும் கைது செய்ய நாட்டிலுள்ள பொலிஸார் அனைவரும் உஷார் நிலையில் வைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### மக்கள் அஞ்சலி

மணலாறில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் 23 ஆம் திகதி ஏற்பட்ட நேரடி மோதலில் பெண் போராளியான மான்விழியின் (சிவசந்தை- செல்வராசா, அல்வாய்

— 6 ஆம் பக்கம் பார்க்க

# மணலாறில் ஒபரேஷன் ஹயபார புலிகளினால் முறியடிக்கப்பட்டது!

## மண்கிண்டிமலை முகாமிற்கு படையினர் நேற்றுக்காலை பின்வாங்கிச் சென்றனர்

மணலாறு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினால் இரண்டாவது தடவையாகவும் எடுக்கப்பட்ட மிகப்பெரும் இராணுவ நடவடிக்கை ஒரு வாரத்தில் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

ஒபரேஷன் ஹயபார என்ற இந்த மணலாறு நடவடிக்கை கடந்த வாரம் 17 ஆம் திகதி ஆரம்பமானது. 3000 துருப்புகளுடன் கவச வாகனங்களும், விமானப் படை, கடற்படைப்படகுகளும் இந் நடவடிக்கையில் பயன் படுத்தப்பட்டன.

### இறுதி முயற்சி பலனில்லை

இறுதி நடவடிக்கையாக நேற்று முன்தினமும் படையினரால் எடுக்கப்பட்ட முன்னேறும் முயற்சியும் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

### அவசரமாகப் பின்வாங்கினர்

இதைத் தொடர்ந்து படையினர் நேற்றுக்காலை அவசரமாக மண்கிண்டிமலை இராணுவ முகாமிற்கு பின்வாங்கிச் சென்றுவிட்டனர்.

### 10 படை காவலரண் அழிப்பு

நேற்று இவ்வாறு பின்வாங்க

...06 ஆம் பக்கம் பார்க்க

## கொக்கட்டிச்சோலைப் படுகொலை

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை கையளிப்பு

கொக்கட்டிச்சோலைப் படுகொலை தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது.

இறுதியறிக்கையை விசாரணைக்குழுவினர் ஜனாதிபதி பிரேமதாஸவிடம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்துக் கையளித்தனர்.

இவ்வறிக்கையின்படி:

☐ இப்படுகொலைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கல்

☐ எதிர்காலத்தில் இப்படியான நடவடிக்கையில் படையினர் ஈடுபடக்கூடாது என அவர்களுக்கு அறிவுறுத்தல்

☐ படுகொலையுடன் சம்பந்தப்பட்ட படையினருக்கு தகுந்த தண்டனையை வழங்கல் ஆகிய சிபாரிசுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜூலை மாதம் கொக்கட்டிச்சோலையில் படையினரால் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமை தெரிந்ததே.

★ குடாக்கடலில் சம்பவம்

## கல்முனை படையினர் சூடு இளம் மீனவர் ஸ்தலத்தில் பலி

நேற்று குருநகரில் இருந்து கல்முனையை அண்டிய கடற் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை நோக்கி கல்முனையில் இருந்த கடற்படையினர் சுட்டதில் குருநகரைச் சேர்ந்த சூசைப்பிள்ளை சகிமோர் (15) நெற்றியில் காயம் ஏற்பட்டு அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இதே இடத்தில் தொழில் செய்து கொண்டிருந்த யேசுதாஸ் சுதாகர் (15) இத்துப்பாக்கி சூட்டினால் தோள் பட்டையில் பலத்த காயம் ஏற்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப்பகுதியில் தொழில் செய்துகொண்டிருந்த ஏனைய மீனவர்கள் மயிரிழையில் உயிர் தப்பிக்கரை சேர்ந்தனர். (1547, 07)

## நெடுங்கேணியில் குண்டுவீச்சு பொதுமகன் பலி

வவுனியாப் பகுதியில் நெடுங்கேணியில் நேற்றுக் காலை விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது

இரு பொம்மர்கள் நடத்திய இக் குண்டுவீச்சில் வரதராசா மாஸ்ரர் என்பவர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

★ இறந்தவரின் தந்தை தகவல்

## வள்ளத்தில் இருந்து மேலெழ நெற்றியில் சூடு விழுந்தது

நாம் பாஷையூர் கடற் பகுதியில் உள்ள கட்டையடி என்ற இடத்தில் தொழில் புரிந்துகொண்டிருந்தோம் எமது படகு கல்முனைக் கரைக்கு சமீபமாகச் சென்றதும் அங்கிருந்து இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

இவ்வாறு நேற்று கல்முனை கடற் பகுதியில் படையினரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து தப்பிவந்த இறந்தவரின் தந்தையான துரைச்சாமி சூசைப்பிள்ளை (குருநகர்) முரசொலிக்குத் தெரிவித்தார்.

படையினரின் துப்பாக்கிச் சூட்டையடுத்து படகில் இருந்து எனது மகன் (இறந்தவர்) மேலே எழுந்து பார்த்தபோது அவரது நெற்றியில் சூடுபட்டதும் அவ்விடத்

... 06 ஆம் பக்கம் பார்க்க

## ஏழாலை வாசிக்கு வவுனியாவில் சூடு

நொச்சிமோட்டை தடைமுகாமில் படையினர் சுட்டதில் ஏழாலையைச் சேர்ந்த தங்கவடிவேல் உயிரிழந்தார். கடந்த சனிக்கிழமை காலை இச்சம்பவம் இடம் பெற்றதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன. 66

★ அணிக்கப்டன்கள் கருத்து

## இம்முறை தீவிரமாகவே விளையாடுவோம் - கிரஹம்கூச்

இருமுறை உலகக்கோப்பை இறுதியாட்டத்தில் பங்குபற்றிய இங்கிலாந்து மூன்றாம் முறையாகவும் உலகக்கோப்பையை கைவிட்டால் அது பெரும் ஏமாற்றமாகும். எனவே நாம் தீவிரமாகவிளையாடுவோம் என இங்கிலாந்து அணியின் கப்டன் கிரஹம் கூச் தெரிவித்தார்.

இப்போட்டியில் வெற்றி பெற்றால் மகிழ்ச்சியுடன் கிரிக்கெட் உலகிலிருந்து ஓய்வுபெறுவேன் என கூச் குறிப்பிட்டார்

இம்முறை பாகிஸ்தானுக்கு மிகப்பெரும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக பாகிஸ்தான் கப்டன் இம்ரான் கான் குறிப்பிட்டார்.

★ அயோத்தியில் இந்து ஆலயத்தைக் கட்ட முற்பட்டால்

# பாரதிய ஜனதாக் கட்சியின் உத்திர பிரதேச மாநில அரசு கலைக்கப்படுமென இந்திய மத்திய அரசு எச்சரிக்கை!

இந்தியாவில் உத்திர பிரதேச மாநில அரசாங்கம் அயோத்தியில் இந்து ஆலயமொன்றை நிர்மாணிக்கும் திட்டத்தைச் செயற்படுத்த முற்பட்டால் அந்த மாநில அரசாங்கத்தை பதவியிலிருந்து நீக்கப் போவதாக மத்திய அரசாங்கம் எச்சரித்துள்ளது.

சர்ச்சைக்குரிய அயோத்தி பகுதிக்கு முஸ்லிம்கள் உரிமை பாராட்டி வருகிறார்கள்.

ஆனால் அயோத்தியாவில் இந்து ஆலயமொன்றைக் கட்டப் போவதாக பாரதிய ஜனதாக் கட்சி அறிவித்ததையடுத்து இந்திய உள்துறை அமைச்சர் சவான் இந்திய பாராளுமன்றத்தில் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

உத்திர பிரதேச மாநில அரசு தற்பொழுது பாரதிய ஜனதாக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ளது.

பாரதிய ஜனதாக் கட்சியின் உத்திரப் பிரதேச மாநில அரசாங்கம் அயோத்தியப் பட்டினத்திலுள்ள 14 ஆம் நூற்றாண்டுப் பள்ளிவாசலை இடித்துவிட்டு இந்து ஆலயமொன்றை அங்கு நிர்மாணிக்க முயல்வதை அனுமதிக்க முடியாது என அவர் கூறினார்.

## ‘சாளரம்’ வெளியீடாக விபுலானந்தர் பற்றிய நூல்

யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்; என்ற தலைப்பில் சாளரம், வெளியீடாக நூல் ஒன்று வெளிவந்துள்ளது;

எங்கள் சமுதாயத்தில் வாழ்ந்து மறைந்த பெரியார்களை மதிப்பீடு செய்யும் போது சமுதாயத்தின் அன்றைய பிரச்சினைகள் பற்றிய அவர்களது அணுகுமுறை, அப்பிரச்சினைகள் அவர்களிடம் ஏற்படுத்திய உணர்வலைகள் என்பனவற்றின் அடிப்படையிலேயே அவர்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்கிற கருத்தினை வலியுறுத்தி இந்நூல் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1920 களில் யாழ்ப்பாண வாலியர் காங்கிரஸ அமைப்பில் விபுலானந்தரின் செயற்பாடு பற்றி இந்நூல் ஆய்வு செய்திருக்கிறது.

## சுப்புலக்சுமியைவிடுவிக்கக்கோரி தமிழகத்தில் உண்ணாவிரதம்

தற்பொழுது தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் திருமதி சுப்புலக்சுமி ஜெகதீசனை விடுதலை செய்யுமாறு கோரி தி. மு. க இளைஞர் அணி நேற்று முன்தினம் தமிழகத்தின் பல வேறு பகுதிகளிலும் ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்தியது.

திருமதி சுப்புலக்சுமி ‘தடா’ தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இடைக்கால அரசு யோசனைக்கு ஆபிரிக்கக் காங்கிரஸ் எதிர்ப்பு

தென்னாபிரிக்க அரசாங்கம் இடைக்கால நிர்வாகமொன்றுக்குள் பெரும்பான்மையினரான கறுப்பின மக்களைச் சேர்த்துக் கொள்ளும் யோசனையொன்றைச் சமர்ப்பித்துள்ளது.

ஆனால் நெல்சன் மண்டேலாவின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இதனை உடனடியாக மறுத்துவிட்டது.

இனப்பாகுபாடு பற்றிய பலகட்சி மாநாட்டில், தற்போதைய அரசியல் அமைப்பை நீக்கிவிட்டு புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்காக நான்கு தற்காலிக அமைப்புக்களை உருவாக்க வேண்டுமென அரசாங்கம் யோசனை தெரிவித்தது.

இந்த அமைப்புக்கள் உருவாக்கப்படும் வரை கறுப்பர்களை உள்ளடக்கிய இந்த இடைக்கால அரசு அமைக்கப்படலாமெனவும் தென்னாபிரிக்க அரசு ஆலோசனை கூறியிருந்தது.

## கண்டெடுக்கப்பட்ட ஆளடையாள அட்டைகள்

கீழே பெயர் விவரம் குறிப்பிடப்பட்டுள்ளவர்களின் ஆளடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் ஆசிரிய பீடத்தில், அலுவலக நேரத்தில், ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்;

செல்லையா குணபாலசிங்கம்- கைவெட்டி, சுந்தரம் அமிர்தானந்த சிவம் சாவகச்சேரி கந்தசாமி பாலகிருஷ்ணன் ஊரியான், அருளானந்தன் சதானந்தன் பண்டத்தரிப்பு, கதிரேசு நடராஜலிங்கம் ஜாஎல, பரமலிங்கம் பாலச்சந்திரன் வட்டக்கச்சி, சவரியான் ஆரோக்கியம் லோகு பேசாலை, நாகமுத்து இராசரட்ணம் தருமபுரம், குமாரசிங்கம் மோகனதாஸ் சாம்பற்தீவு.

பாலகிருஷ்ணன் பாலச்சந்திரன் அன்னாலை, சின்னடம்பு இருதயராஜா குருநகர், தேவராசன் ரவிச்சந்திரன் வேலணை கிழக்கு. இராசலிங்கம் வடிவழகன் நாவற்குழி பாலகிருஷ்ணன் பாலச்சந்திரன் பருத்தித்துறை, இராசதுரை மகேஸ்வரன் யாழ்ப்பாணம், இறிகிதோம் இக்னேஷியஸ் குருநகர், கணபதிப்பிள்ளை தனபாலசிங்கம் இராமநாதபுரம்; சண்முகம் தர்மலிங்கம் பட்டியாந்தோட்டை,

சதாசிவம் பாலசுப்பிரமணியம் கப்பிளான், பிலிப்பையா மாசிலாமணி வண்ணார் பண்ணை, செல்வராசா சின்னத்தம்பி சண்டிலிப்பாய், கயிலாயபிள்ளை காவலூர், குருநாதபிள்ளை குமாரராஜா இரத்தினபுரி.

கல்யாணி இராஜேஸ்வரன் நல்லூர், புவனவதி கதிர்த்தம்பி செருடாவில், சகுந்தலாதேவி நீக்கிலாப்பிள்ளை ஈச்சமோட்டை, தங்கச்சியம்மா குமாரசுவாமி புங்குடுதீவு கிழக்கு, சுப்பிரமணியன் ரோகினி தேவி கோப்பாய் தெற்கு, பரமேஸ்வரி சுப்பிரமணியம் யாழ்ப்பாணம், தங்கரெத்தினம் கதிரவேற்பிள்ளை வல்வெட்டித்துறை, சச்சிதானந்தன் கஜவல்லி. அக்கலைப்பிட்டி, மயில்வாகனம் நாகேஸ்வரி குமரபுரம் பாறுபதி சேதியன் நீர்வேலி தெற்கு. ரமணி ஆறுமுகம் தண்ணீரூற்று.

## இன்று. .

யாழ் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தின் கருத்தரங்குத் தொடரில் ‘‘சோவியத் நாட்டில் அண்மையில் ஏற்பட்ட மாற்றங்களும் அதன் தாக்கங்களும்’’ எனும் தலைப்பில் பொருளியல் துறைத் தலைவர் கலாநிதி என். கே. சண்முகநாதன் இன்று புதன் பிற்பகல் 3.30 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் உரை நிகழ்த்துவார்

## கொக்குவில் அணி வெற்றி பெற்றது

யாழ் உதைபந்தாட்ட லீக்கினரால், லீக் முறையில் நடாத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகத்திற்கும் பாஷையூர் சென் அந்தனீஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நேற்று முன்தினம் சென் அந்தனீஸ் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற போட்டியில் கொக்குவில் விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது இப்போட்டிக்கு நடுவராக ஏ தேவராசா கடமையாற்றினார். (16)

## அவுஸ்திரேலியாவில் தமிழருக்கு ஜே. பி. பதவி

இலங்கைத்தமிழர் ஒருவர் அவுஸ்திரேலியாவில் முதன் முறையாக சமாதான நீதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்

இவர் பெயர் கந்தசாமி கென்சிங்டன் என்பதாகும், இவர் அவுஸதிரேலிய இலங்கைத் தமிழர் சங்கத் தலைவரும் அவுஸதிரேலிய இந்து மகாசபை உறுப்பினருமாவார். 22

## கந்தப்புராண படிப்பு

பருத்தித்துறை சிவன் கோவிலில் கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்று வந்த கந்தபுராணப் படிப்பின் திருக்கல்யாணப் பூசை கடந்த புதன்கிழமையும் மறுநாளான வியாழக்கிழமை விஷேட பூசைகள், அன்னதானமும் நடைபெற்றன

திருக்கல்யாணப் பூசையை பருத்தித்துறை இலங்கை வங்கியும், மறுநாள் நடைபெற்ற விசேட பூசைகள், அன்னதானத்தை தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறைக் கிளையும் நடத்தியிருந்தன. 11

## அயோத்தி விவகாரத்தால் உத்தரபிரதேச சட்டசபையில் அமளி

சர்ச்சைக்குரிய அயோத்தியா விவகாரம் தொடர்பாக உத்தர பிரதேச சட்டசபையில் நேற்றும் பெரும் அமளி துமளி ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து சட்டசபை ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை அயோத்தியில் முஸ்லிம் மசூதிக் கட்டிடங்களை இடித்துத் தள்ளும் இயக்கம் நேற்று முன்தினமும் தொடர்வதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இன்றைய உலகக் கிண்ண வர்ணனை அரியாலையில் ஒலிபரப்பப்படும்

இன்று அவுஸ்திரேலியாவில் நடைபெறும் 5 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை வானொலி மூலம் பெற்று அதனை ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்புவதற்கான ஏற்பாடுகளை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் செய்துள்ளது.

இவ் ஒலிபரப்பு ஆட்ட ஆரம்பமுதல் இறுதிவரை தொடர்ச்சியாக நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (16)

## கொழும்புக்கான தபாற் பொதிகள் இன்று ‘கோமாரி’யில் செல்லும்

பருத்தித்துறையில் இருந்து இன்று கொழும்பை நோக்கிப் புறப்படவுள்ள ‘கோமாரி’க் கப்பலில் கொழும்புக்குரிய தபாற் பொதிகளும் எடுத்துச் செல்லப்படவுள்ளன.

அத்துடன் நேற்றுமுன்தினம் மேற்படி துறைமுகத்தை வந்தடைந்த குமண கப்பலில் வெளியூர் தபாற் பொதிகள் வந்திருக்கக் கூடும் எனவும் இவை பொருள்களுக்கு அடியில் இருக்கலாம் என நம்பப்படுவதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (47)

## மீனவர்களின் விடுதலை பற்றி அரச அதிபர் கொழும்பில் பேசுவார்

யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் நேற்றுக் காலை விமானம் மூலம் கொழும்பு பயணமானார்.

யாழ். மாவட்டத்திற்குத் தேவையான அத்தியாவசிய சேவைகள், ஒளிநொச்சிக்கான மின்சார விநியோகம், யாழ் குடாக் கடலில் வைத்து இராணுவத்தால பிடிக்கப்பட்ட மீனவர்களின் விடுதலை மற்றும் சில பிரச்சினைகள் பற்றி இவர் கொழும்பில் ஜனாதிபதி .பிரதமர் மற்றும் அமைச்சர்களின் உயரதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்துவார் என யாழ். செயலக வட்டாரம் தெரிவித்தது. 47

## டில்லியில் இந்திய - இஸ்ரேல் உத்தியோகபூர்வ பேச்சு ஆரம்பம்

இந்தியாவும் இஸரேலும் தமது முதலாவது உத்தியோகபூர்வ பேச்சுக்களை புதுடில்லியில் ஆரம்பித்துள்ளன.

விஞ்ஞானம், விவசாயம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வழங்க இருதரப்பினரும் இணங்கியுள்ளனர்.

## ‘ஸ்கட்’ ஏவுகணைகளை ஈராக் முற்றாக அழித்தது!

ஈராக் தனது எல்லா ‘ஸ்கட்’ ஏவுகணைகளையும் அழித்து விட்டதாக ஈராக்கில் தங்கியுள்ள 35 பேரைக் கொண்ட ஐ. நா. ஆயுத அழிப்புக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஏவுகணைத் தயாரிப்புக்கான சாதனங்களையும் ஈராக் அழித்துவிட்டதாக இக்குழு தெரிவித்துள்ளது.

அணு ஆயுதங்களும் அழிக்கப்பட்டு விட்டதாக ஈராக் கூறியுள்ளது தொடர்பான பரிசீலனையை இந்த ஐ. நா. குழு தற்பொழுது மேற்கொண்டுவருகிறது.

## காவிரி நடுவர் மன்ற தீர்ப்பு கேலிக்கூத்தாகிறது- வாழப்பாடி இராமமூர்த்தி

காவிரி நீரை தமிழகத்திற்கு வழங்குவது தொடர்பாக காவிரி நடுவர் மன்றத்தினால் வழங்கப்பட்ட இடைக்காலத் தீர்ப்பை செயற்படுத்தும்படி கர்நாடக மாநில அரசுக்கு மத்திய அரசு உத்தரவிட வேண்டுமென தமிழ்நாடு காங்கிரஸ் ஐ.க.இத் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கேட்டுள்ளார்.

இதுவரை நடைமுறைப் படுத்தப்படாத இத் தீர்ப்பு ஒரு கேலிக்கூத்தாகவே கருதப்படுகிறது, இக் கருத்தைப் போக்க வேண்டுமானால் அதை உடனடியாக செயற்படுத்த வேண்டுமெனவும் அவர் கூறினார்.

நல்லூர் கிளை நூலகம்
மா ... ... றம்
யாழ்ப்பாணம்



# கடும்வறட்சியினால் யாழ். குடா கரையோரப் பகுதி நீர்த்தேக்கங்களில் மீன்கள் பெருமளவில் இறப்பு!

யாழ்.குடாவில் கடற்கரையோரங்களில் உள்ள நீர்த்தேக்கங்களில் கணிசமான அளவில் காணப்படும் கடல் ஜீவராசிகள் தற்போதைய கடும் வறட்சி காரணமாக அவை பூரணமாக வளர்ச்சியுற முன்னரேயே இறந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆழ் கடல் மீன்பிடி பாதிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் குடாநாட்டுக்கான கடலுணவுப் பொருள்களின் தேவையை ஈடு செய்வதில் கடலோர நீர்த்தேக்கங்களும் கணிசமான பங்களிப்பை வழங்கி வருகின்றன.

இதனால் மீனினங்களின் இறப்பைத் தடுப்பதற்காக, கடற்கரை ஓர நீர்த்தேக்கங்களை ஆழமாக்கி அவற்றில் கூடுதலான நீரைத் தேக்கி வைக்கும் முயற்சியொன்றில் தமிழீழ ஆய்வு நிறுவனம் தற்பொழுது ஈடுபட்டுள்ளது.

இம் முயற்சிக்கு முன்னோடியாகவும் பரீட்சார்த்தமாகவும் குடத்தனை கரை ஓரமாகவுள்ள நீர்த்தேக்கங்களை ஆழமாக்கி வறட்சியான காலத்திலும் அவற்றில் போதியளவு நீர் தேங்கி நிற்கவும் தேவை ஏற்படும் பட்சத்தில் கடல் நீரைப் பாய்ச்சுவதற்கும், மாரிகாலங்களில் மழை நீரால் அபரிமிதமாக நிரம்பும்போது அவசியமற்ற நீரை வெளியேற்றவும் கூடிய மார்க்கத்தைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன,

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட இடங்களுக்கு யாழ் மேலதிக அரசாங்க அதிபர், பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆகியோரை உள்ளடக்கிய குழு ஒன்று அண்மையில் சென்றிருந்தது.

இக்குழு, கற்கோவளம், குடத்தனை, நாகர்கோவில் ஆகிய பகுதிகளைப் பார்வையிட்டதாகவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இது விடயமாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் பற்றிக் கலந்தாலோசிக்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 16

## டி. ஐ. ஜி. உடுகம்பொலவின் கடவுச்சீட்டைப் பறிக்க உத்தரவு!

பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொலவின் கடவுச்சீட்டைப் பறிமுதல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது

மாளிகாவத்தை மஜிஸ்ரேட் ஈ ஏ அமரசேகர குடிவரவு குடியகல்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளருக்கு இந்தப் பணிப்புரையை வழங்கியுள்ளார்.

அத்துடன் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல நாட்டை விட்டு வெளியேறாதவாறு தகுந்த நடவடிக்கையெடுக்குமாறு தேசிய புலனாய்வுப் பணியக உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கும் அவர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

தெற்கில் பல மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஈடுபட்டவர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல தற்பொழுது கட்டாய விடுமுறையில் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது,

## சகல இன மக்களையும் சமமாக மதிப்பவர் ஜனாதிபதி-சிறிசேன குரே

'இந்த நாட்டில் சகல இன மக்களையும் ஒன்றிணைத்து சகலருக்கும் அதிகாரங்களைப் பெற்றுக் கொடுப்பதே ஜனாதிபதியின் நோக்கம்'

'எந்தவொரு இனத்திற்கோ, மதத்திற்கோ அவர் விசேட சலுகை காட்டுவதில்லை, சகலரையும் ஒரே இனமாகவே அவர் மதித்துச் செயற்படுகிறார்"

இவ்வாறு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன குரே கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தையில் கணபதி வித்தியாலயத்தின் புதிய மாடிக்கட்டிடத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

## சமாசத் தேர்வுகள்

வலி-மேற்குப் பிரதேசசபைகளுக்கு உட்பட்ட 52 பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கான சமாஜத் தேர்வுகள் தற்சமயம் அவ்வவ் உப அலுவலகங்களில் நடைபெற்று வருகின்றன. (50)

## சோவியத்தில் கல்வி கற்ற மாணவர்க்கு ஆபத்தில்லை!

முன்னாள் சோவியத் யூனியனில் கல்வி பயின்ற இலங்கை மாணவர்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சும், உயர்கல்வி அமைச்சும் நேற்று முன்தினம் கொழும்பில் இது குறித்து கூடி ஆராய்ந்தன.

அதன் பின்னர் தகவல் தொடர்பு சாதனங்களுக்கு வெளியிடப்பட்ட அறிக்கையில் அவர்கள் எவரினதும் உயிருக்கும் ஆபத்து ஏற்படவில்லை என உறுதி கூறப்பட்டுள்ளது.

## வீடு பெற்றுத் தருவதாக பணம் பெறும் மோசடி

வீடமைப்பு அதிகாரசபையிடம் இருந்து வீடு பெற்றுத் தருவதாகக் கூறிப் பணம் பெற்ற கோஷ்டி ஒன்று மக்களை ஏமாற்றியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி எச்சரிக்கை விடுத்துள்ள வீடமைப்பு அதிகார சபை இப்படியான மோசடி கொழும்பில் அதன் சுற்றுப்புறங்களிலும் இடம்பெற்றுள்ளதாகவும் இவர்களை நம்பி ஏமாற வேண்டாமெனவும் எச்சரித்துள்ளது,

## இன்று போட்டி

சண்டிலிப்பாய் மணிமேகலை சிறுவர் அறிவாலயத்தின் விளையாட்டுப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஐயனார் வீதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (37)

## தமிழக மத்திய அரசுகளுக்கிடையே முரண்பாடு இல்லை-நட்வர்சிங்

தமிழ்த்திராவிடர்கள் விடயமாக தமிழக அரசுக்கும் மத்திய அரசுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் இல்லை என இந்திய முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கே.நட்வர்சிங் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் குறித்து தமிழ்நாட்டின் முதல்வர் ஜெயலலிதா சரியான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கிறார் எனவும் நட்வர்சிங் தெரிவித்தார்.

திரு.நட்வர்சிங்கும் அவரது மனைவியும் தற்பொழுது கொழும்பில் தங்கியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றுதல் நேற்றுடன் நிறுத்தம்!

நாய்களுக்கு விசர்நோய் வராமல் ஏற்றப்பட்டு வரும் தடுப்பூசி மருந்து நேற்றுடன் முடிந்துவிட்டதாக யாழ் மாநகர சுகாதாரப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் நகரின் ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள நாய்களுக்கு தடுப்பூசி மருந்து கடந்த வாரத்தில் இருந்து போடப்பட்டு வருவதாகவும் கொழும்பில் இருந்து வந்ததும் இவ்வேலை தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (47)

## அரசின் உத்தரவுகளை மீறும் மாநில அரசுகள் கலைக்கப்படும்!

இந்தியாவில் எந்த ஒரு மாநில அரசும் மத்திய அரசின் உத்தரவுகளையை நடந்து கொள்ளத் தவறினால் அவை கலைக்கப்படும் என இந்திரா காங்கிரஸ் ஆட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய பாராளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் சவான் நேற்று முன்தினம் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தார்.

இந்தியாவில் தற்பொழுது எழுந்துள்ள பல பிரச்சினைகளுக்கு மாநில அரசுகளே காரணமாக இருந்திருக்கின்றன.

இதனால் மத்திய அரசின் உத்தரவுகளைப் பின்பற்றத் தவறும் மாநில அரசுகள் இனி ஆட்சியில் நீடிக்க முடியாது. அவை கலைக்கப்படும் என சவான் அங்கு எச்சரித்தார்.

இந்திய அரசியலமைப்புக்கு அமைய இந்த ஆட்சிக் கலைப்பை கொண்டு வருவதைத் தவிர மத்திய அரசுக்கு வேறு வழிமுறைகள் இருப்பதாகத் தெரியவில்லை எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்,

## மலையக இளைஞர்களை விடுவிக்க எம்.பி.கோரிக்கை

கடந்த 5 மாதங்களில் ஊவா மாகாணத்தில் புலிகளுடன் தொடர்பு என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நாற்பத்தேழு மலையகத் தமிழரை உடன் விடுவிக்குமாறு பதுளை மாவட்ட இ.தொ.கா. எம்பியுமான வீ. சென்னன் கூறினார்.

இவர்கள் மகஸின் சிறைச்சாலையில் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சொன்னார்.

## வட-கிழக்குப் பகுதிகளில் 3-வது இராணுவ நடவடிக்கையாம்

தற்பொழுது வடக்குக் கிழக்கில் ஏககாலத்தில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

'மூன்றாவது புலிவேட்டை' எனப் படையினரால் அழைக்கப்படும் இந்த ஏககாலத் தாக்குதல்களின் மூலம் விடுதலைப்புலிகளை காடுகளிலிருந்து வெளியே கொண்டுவர முடியும் எனப் படையினர் கருதுவதாகவும் அப் பத்திரிகைகள் எழுதியுள்ளன.

## சில தினங்களில் மின்வெட்டு

நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வெகுவேகமாகக் குறைந்து வருவதன் விளைவாக இன்னும் சில தினங்களில் மின்வெட்டு அமுல் செய்யப்படலாமென மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

## பாதயாத்திரைக்கு எதிராக ரூபவாஹினியில் பிரசாரம்

எதிர்க்கட்சியினரின் எதிர்கால பாதயாத்திரைக்கு எதிர்ப்பிரசாரமாக கடந்த சிலதினங்களாக ரூபவாஹினியில் ஜனாதிபதி பிரேமதாஸவைப் பற்றிய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன.

அவர் அரசியலுக்கு வந்தது முதல் ஜனாதிபதியாக இருப்பது வரை கலந்து கொண்ட முக்கிய நிகழ்ச்சிகள் காண்பிக்கப்படுகின்றன.

குறிப்பாக வீடில்லாதவர்களுக்கு வீடமைப்புத் திட்டம் ஜனசக்தி என்பனவற்றுக்கு முக்கிய இடம் அளிக்கப்படுகிறது

## மருதடி கொடியேறுகிறது

மானிப்பாய் மருதடி விநாயகராலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தேர்த்திருவிழா சித்திரை வருடப்பிறப்புத் தினத்தில் நடைபெறும். (37)

## இலவச ஆங்கில வகுப்பு

வலி-வடக்கு ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தால் எதிர்வரும் புத்தாண்டுடன் இலவச ஆங்கில வகுப்பு ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

16-30 வயது எல்லைக்குட்பட்ட இருபாலாரும் சங்கத்துடன் தொடர்பு கொண்டு பயிற்சி வகுப்பில் அனுமதி பெறமுடியும்.

## சுவிஸ் வங்கி பற்றி நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள்

சுவிஸ் வங்கிகளில் வங்கிக்கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு குறைந்த பட்சம் 20 டைசம்ரூபாவேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

சுவிஸ் வங்கியின் சுமார் ஐந்நூறுக்கு மேற்பட்ட வங்கிகளிலும் அதன் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட கிளைகளிலும் உள்நாட்டு வெளிநாட்டு வாடிக்கையாளர்கள் இரகசிய கணக்கை வைத்துள்ளனர் என சுவிஸிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வங்கிகளில் போடப்படும் பணத்துக்கு வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு வட்டி எதுவும் வழங்குவதில்லை. ஆனால் இப்பணத்துக்கு வாடிக்கையாளர்களிடமிருந்து தரகுப் பணத்தை கழித்து எடுக்கிறது,

இவ்வங்கிகளில் வெளிநாட்டவர் ஒருவர் இரகசிய வங்கிக் கணக்கை ஆரம்பிக்கவேண்டுமாயின் 20 டைசம்ரூபா பணத்துடன் தமது பாஸ்போட், நாட்டின் விவரம் என்பவற்றை தெரிவித்தால் உடனேயே கணக்கு ஆரம்பிக்கலாம். இவர்களின் சட்டப்படியான பணத்துக்கே வங்கி உத்தரவாதமளிக்கும். குறித்த நபரின் பணம் சட்டத்துக்கு மாறானது என எந்த நாடும் இவ்வங்கியில் முறையிட்டு செய்தால் வங்கி இதுபற்றிய விவரங்களை குறிப்பிட்ட நாட்டிற்கு வெளியிடும். (15)

# செய்தி உலகம்

## கையடக்கமான 'வாட்டர் பில்டர்'

வெளியூர் செல்லும்போது நல்ல நீர் பருகக் கிடைப்ப தில்லை பலருக்கு.

இதற்கு ஒரு கருவி அமெரிக்காவில் அறிமுகம் செய்யப் பட்டுள்ளது. 375 கிராம் நிறைகொண்ட 'வாட்டர் பில்டர்' இது.

இதில் நீரை வடிகட்டி சுத்தப்படுத்தி அருந்தலாம். கைய டக்கமான கருவி இதுவாகும். (22)

## நிம்மதியான தூக்கத்திற்கு

நிம்மதியான தூக்கம் இரவில் வருவதற்கு நாம் படுக் கப் பயன்படுத்தும் மெத்தை மிருதுவாக இல்லாமல் சற்று அழுத்தமானதாக இருக்கவேண்டும், மனதில் எதுவித கவலை யும் இருக்கக்கூடாது, போதிய உடற்பயிற்சியை நாளாந்தம் செய்யவேண்டும்.

இரவில் நித்திரை வராது இருந்தால் புத்தகங்களை வாசிப்பது சிறந்தது.

பிரபல பிரிட்டிஷ் எழுத்தாளர்களான மரியோன் கோஹனர், ஜீன் சார்பியே ஆகிய இருவரும் இணைந்து எழுதிய புத்த கத்தில் இத் தூக்கம் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள் ளன. (15)

## சிகரெட்புகை செய்யும் வேலை

சிகரெட் புகையில் ஏறக்குறைய 800 வகையிலான நச்சுப் பொருள்கள் கலந்துள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப் புகையில் இருந்து உள்ளே செல்லும் நச்சுப் பொருள்கள் மூச்சுக் குழாய், நுரையீரல் என்பவற்றில் படிவத னால் மூச்சுக் குழாயில் உள்ள தசைநார்கள் முற்றாகச் செயற் படாமல் போய்விடுவதாகவும் இதனால் காலப்போக்கில் இரு தய நோய் உருவாக ஏதுவாக அமைவதாகவும் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. (15)

## முதுமையில் எப்படி இருப்பீர்கள்?

'ப்யுமினோ மஹிகரா' என்கின்ற ஜப்பானிய விஞ்ஞானி யால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதியரக கம்ப்யூட்டர் பாவ னைக்கு வந்ததும் முதுமையடைந்தால் உங்கள் முகம் எவ் வாறு இருக்கும் என்பதனை முன்கூட்டியே அறிந்துகொள்ள முடியும் எனக் கூறப்படுகிறது. விரைவில் இக் கம்ப்யூட்டர் விற்பனைக்கு விடப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (15)

★ 'பான் அமெரிக்க' விமானக் குண்டுவைப்பு;

# இரு நபர்களையும் ஒப்படைக்க ஈரான் இணக்கம்!

'பான் அமெரிக்க' நிறுவன விமானத்தைக் குண்டு வைத் துத் தகர்த்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள இரண்டு நபர்களை அரபு லீக்கிடம் ஒப்படைப்பதற்கு தயாரெ னக் கூறியுள்ள லிபியா அதற் கான அனுமதியையும் ஐ.நா. சபையிடம் கோரியுள்ளது.

இதே வேளை இந்த இருவ ரையும் நிபந்தனை எது வுமின்றி ஐ.நா. தலைமைச் செயலரிடம் ஒப்படைக்கத் தாமும் தயாரென அரபுலீக் அறிவித்திருக்கிறது.

இதனையடுத்து இந்த இரு வரையும் விசாரணைக்காக ஏற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை ஐ.நா. சபை ஆரம்பித்துள்ளது.

லிபியா மீது பொருளாதா ரத் தடையைக் கொண்டுவர தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வரும் வேளையிலேயே ஈரான் குற்றம் சாட்டப்பட்ட இரு வரையும் ஒப்படைப்பது பற் றிய அறிவித்தலை விடுத்துள் ளது.

இந்த இருவரும் ஐ.நா.வி னால் விசாரணைக்காக அமெரிக்காவிடமும், பிரிட்ட னிடமும் ஒப்படைக்கப்படு வார்களென எதிர்பார்க்கப்ப டுகிறது.

## கருத்தரங்கு இவ்வாரம் இல்லை

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினால் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்தப்படும் வாராந்தக் கருத்தரங்கு தவிர்க்க முடி யாத காரணத்தால் இவ் வாரம் நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## உடனடியாக வேலை வழங்க அமைச்சுக்களுக்குப் பணிப்பு

இந்தியாவிலிருந்து அகதி களாக நாடு திரும்பியுள்ள வடக்குகிழக்கு அரசாங்க ஊழி யர் அனைவரையும் அவர்கள் ஏற்கனவே வகித்த பதவிகளில் உடனடியாக மீண்டும் சேர்த் துக்கொள்ளுமாறு பொதுநிர் வாக மாகாண சபைகள் அமைச்சு பணித்துள்ளது.

அமைச்சர்களின் செயலா ளர்கள், திணைக்களத் தலை வர்கள், கூட்டுத்தாபனத் தலைவர்கள் ஆகியோருக்கு இது தொடர்பான சுற்று நிருபங்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

## முத்தமிழ்விழா நிதிக்காக மாபெரும் கலை நிகழ்ச்சிகள்

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் சென்ற ஆண்டைப்போல் இவ் வாண்டும் தமிழீழத்தின் பல பாகங்களிலும் பத்து நாள்கள் முத்தமிழ் விழா மிகவும் சிறப் பாக கொண்டாடப்பட இருக் கின்றது.

முத்தமிழ் விழாவில் தமி ழீழ மக்கள் அனைவரினதும் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதன் பொருட்டு கலைநிகழ்ச்சிகளை நடாத்தி முத்தமிழ் விழாவிற்காக நிதி சேர்ப்பதென முத்தமிழ் விழாக்குழுவினர் முடிவு செய் துள்ளனர்.

அதன்படி முதலாவதுகட்ட நிகழ்ச்சிகளாக,

28-03.92 சனிக்கிழமை பி. பகல் 6.30 மணிக்குக் கோப் பாய் கிறிஸ்தவக் கல்லூரியி லும், 29-03-1992 ஞாயிற் றுக்கிழமை இரவு 7 மணிக் கோண்டாவில் இராமகிருஷ் ணாப் பாடசாலை அரங்கி லும் மாபெரும் கலை நிகழ்ச் சிகள் நடாத்தப்பட உள்ளன.

'இந்த மண் எங்களின் சொந்த மண்' புகழ் சாந்தன் குழுவினர் வழங்கும் 'போர்க் கால ராகங்கள்' இசைநிகழ்ச் சியும், விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தி னரின் தயாரிப்பில் உருவான திரு. பொன். கணேசமூர்த்தி யின் 'சந்தனக்காடு' நாடக மும் இடம்பெறவிருக்கின்றது.

ரூபா 50, 25 10 பெறுமதி யான அன்பளிப்புச் சீட்டுக்க ளைப் பெற்று முத்தமிழ் விழா வெற்றி பெற ஒத்துழைக்கும் வண்ணம் முத்தமிழ் விழாப் பொறுப்பாளர் கேட்டுள் ளார்.

## நாவலர், விபுலானந்தருக்கு கொழும்பில் சிலைகள்!

ஆறுமுகநாவலர் பெருமா னினதும், சுவாமி விபுலானந் தரினதும் சிலைகள் நேற்று கொழும்பு விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டன.

இது தொடர்பாக ஜனாதி பதி வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் 'ஸ்ரீலஸ்ரீ நாவல ரும், சுவாமி விபுலானந்தரும் இந்துக்களின் நன்மைக்காகத் தமது முழுவாழ்நாளையுமே அர்ப்பணித்தனர்" எனத் தெரிவித்துள்ளார்.

## பதவியுயர்வுடன் புதிய நியமனம்

முல்லைத்தீவு மாவட்டத் தேசிய வீடமைப்பு அதிகார சபைக் காரியாலயத்தில் உதவி முகாமையாளராகக் கடமையாற்றிய தம்பிராசா சிவதாஸ் மன்னார் மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவி ருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளராகப் பதவியுயர்வுடன் நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் தனது புதிய பொறுப் புக்களை எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி பாரமேற்க வுள்ளார்.

★ இலங்கை வங்கி ஊழியர் சங்கம் கண்டனம்

# அரச வங்கிகள் பற்றி பிரதமர் சபையில்தெரிவித்தவை தவறே

பிரதம மந்திரி அண்மை யில் பாராளுமன்றத்தில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவை தொடர்பாக தெரி வித்த சில தகவல்கள் தவறா னவை என இலங்கை வங்கி ஊழியர் சங்கம் வெளியிட் டுள்ள பிரசுரமொன்றில் தெரி விக்கப்பட்டுள்ளது.

'52 வருடகால சேவை யைக் கொண்ட இலங்கை வங்கியும், 31 வருடகால சேவையைக் கொண்ட மக்கள் வங்கியும் வங்குரோத்து நிலை யிலுள்ளன எனப் பிரதமர் பாராளுமன்றத்தில் தெரிவித் துள்ளது தவறானது ஆகும்.'

'உலக வங்கியும் இவ்விரு அரச வங்கிகள் தொடர்பாக தவறான கூற்றுக்களையே கூறியுள்ளது. இவை கண்டிக் கத்தக்கவை'

என 15 ஆயிரம் அங்கத் தவர்களைக் கொண்ட இலங்கை வங்கி ஊழியர் சங் கத்தின் இப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (16)

# நேற்று முன்தினம் முதல் மட்டுநகரில் கடும் சோதனை!

மட்டக்களப்புநகரில் நேற்று முன்தினம் காலை முதல் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சோதனை நடவடிக்கை களில் பொலிஸார் ஈடுபடுத் தப்பட்டிருந்தனர்

நகருக்கு வருவோர், நகரில் இருந்து வெளியே செல்வோர் எல்லோரும் பலத்த சோத னைக்கு உள்ளாக்கப்படுவதா கத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டுநகர்ப் பகுதி என்று மில்லாத வகையில் கடுமை யான சோதனையாக இது அமைந்துள்ளது எனவும் கூறப் படுகின்றது.

## நாற்பத்தோராவது நினைவுதினம்

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரினால் ஈழகேசரி பொன்னையாவின் நாற்பத் தோராவது நினைவு தினம் சம்பன் கோட்டம் நல்லூரில் 29 ஆம் திகதி ஞாயிறு காலை 9 மணிக்கு நடாத்தப்படவுள் ளது.

கலைப் பேரரசு வழங்கும் தாளக்காவடியும், நாடகமும் அங்கு இடம்பெறும்.

## 111 அரசஊழியர்களுக்கு வவுனியாவில் நிவாரண உதவிகள்

இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு இதுவரை காலமும் நிவாரணம் எது வும் கிடைக்காமல் இருந்து வந்த வவுனியா மாவட்டத் தைச் சேர்ந்த 111 அரச ஊழி யர்களுக்குரிய நிவாரண உத விகள் நேற்று முன்தினம் வவுனியா மத்திய மகாவித்தி யாலயத்தில் வைத்து வழங்கப்பட்டன.

புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக நலன் அமைச்சர் தயா ரத்னா இவற்றைக் கையளித் தார்.

## தென்மராட்சிக் கோட்டத் தமிழ்த்திறன் போட்டி முடிவுகள்

தென்மராட்சிக் கல்விக் கோட்டத் தமிழ்த்திறன் போட்டிகள் இம்மாதம் 22, 23 ஆம் திகதிகளில் சாவ. இந் துக் கல்லூரி, சாவ. டிறிபேக் கல்லூரி ஆகியவற்றில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. சிவகுருநாதன் தலைமையில் உதவிக் கல்விப் பணிப்பாளர் கள் இ. கணேசன், சு. சின்னத் தம்பி ஆகியோரின் நெறிப்ப டுத்தலில் நடைபெற்றன,

இப்போட்டிகளில் சாவகச் சேரி வடமராட்சி கோட்டத்தணி 13 முதலிடங்களையும், உசன், சாவகச்சேரிநகர், மட்டுவில், கைதடி கோட்டத்தணிகள் தலா 6 முதலிடங்களையும், கொடி காமம் கோட்டத்தணி 5 முதலி டங்களையும் வரணிக் கோட் டத்தணி 2 முதலிடங்களையும் பெற்றன.

திறந்த போட்டியில் மிருசு வில் உசன் இராமநாதன் ம. வித்தியாலயம் மேடையேற் றிய நாட்டுக்கூத்து, நாட்டிய நாடகம் ஆகியன பார்வையா ளர்களால் வெகுவாகப் பாராட் டப்பட்டதுடன் முதலிடத்தை யும் பெற்றன. (29)

## போட்டிகள்

73 ஆவது சுதேசிய தினக் கொண்டாட்ட விழாவை முன் னிட்டு அரியாலை விளை யாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளின் ஓர் அங்கமாக நேற்று முன் தினம் நல்லூர் தெற்கு சன சமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற கரபந்தாட்டப் போட்டியில், காந்தி விளை யாட்டுக் கழக அணி சுதேசிய அபிவிருத்திக் கழக அணியை யும் நல்லூர் தெற்கு சனசமூக நிலைய அணி கலைமகள் விளையாட்டுக்கழக அணியை யும் இரு நேர் செற்றுகளால் வென்றன.

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். கணநாதன் போட்டிகளை ஆரம் பித்துவைத்தார் இப்போட் டிக்கு நடுவர்களாக வே. நாகேந்திரனும், கன்ரின் டி. ஏ. எம். குணசிங்கமும் கடமையாற்றினார்கள். (16)

★ கல்விப் பணிப்பாளர் சுற்றுநிருபம்

# வைபவங்களில் அதிபர்கள் முன் அனுமதி பெறவேண்டும்

பாடசாலை அதிபர்கள் பாடசாலைக் கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினர்களாகவோ, சிறப்பு விருந்தினராகவோ, பரிசில்களை வழங்குபவர்களாகவோ கலந்து கொள்வதாயின் அவ்வக் கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்களின் முன் அனுமதியைப் பெறாமல் அவர்களுடைய பெயர்களை விளம்பரப்படுத்தக் கூடாது என யாழ் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் இக்கொண்டாட்டங்களில் இவர்கள் ஆற்ற உள்ள உரைகள் பற்றிய சுருக்கக் குறிப்பை சம்பந்தப்பட்ட கோட்டத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளருக்கு எழுதி வழங்கி அவரது அனுமதியையும் பெற்ற பின்னரே உரையை ஆற்ற அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தமது சுற்று நிருபத்தின் மூலம் அறிவித்துள்ளார். (15)

# நயினாதீவு, அனலைதீவில் பணப்புழக்கம் மந்தகதியில்

நயினாதீவு, அனலைதீவு பகுதி ஆசிரியர்களுக்கு 1991 அக்டோபர், நவம்பர் மாதங்களுக்குரிய சம்பள முற்பணம் 1000 ரூபா புனர் வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்டது.

1991 டிசம்பர் 1992 ஜனவரி பெப்ரவரி மாதங்களுக்குரிய சம்பளம் பணமாக வழங்கப்பட்டது.

இத்தீவுகளில் பணப்புழக்கம் மந்தமாக இருப்பதால் காசோலைகளை மாற்றமுடியாதிருப்பதாகவும் அப்பகுதி ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். (15)

# குமண கப்பலில் வந்த ஏ.ஆர்.வி. மருந்து போதாது

குமண கப்பலில் இருந்து எடுத்து வரப்பட்ட விசர் நாய்த் தடுப்பூசி மருந்தான ஏ.ஆர்.வி. யாழ் பொது மருத்துவமனைக்கு இன்று எடுத்துவரப்பட்டு நாளை வியாழன் தொடக்கம் ஏற்றப்படும் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

விசர்நாயினால் கடியுண்டு பாதிக்கப்பட்ட சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்டவர்கள் விசர் நாய்த் தடுப்பூசி மருந்தினைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விசர் நாய்க்கடிக்குள்ளானவர்கள் தொடர்ந்தும் யாழ் ஆஸ்பத்திரிக்கு வருவதால் குமண கப்பலில் வந்த ஏ.ஆர்.வி. மருந்து போதாதிருப்பதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (07)

# மந்திகை ஆஸ்பத்திரியில் ஏற்புத்தடுப்பூசி மருந்து இல்லை

மந்திகை ஆஸ்பத்திரியில் ஏற்புத்தடுப்பூசி மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் யாழ் ஆஸ்பத்திரிக்கே வருகின்றனர்.

மந்திகை ஆஸ்பத்திரி விடுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கு மட்டுமே ஏற்புத் தடுப்பூசி மருந்து ஏற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தினமும் பத்துக்குமேற்பட்டவர்கள் அங்கிருந்து யாழ் ஆஸ்பத்திரிக்கு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது 10, 07

# தென்மராட்சிப் பகுதியில் தொழிற் திட்டங்கள்

தென்மராட்சிப் பகுதியில் கிராமிய மூலவளங்களைக் கொண்டு தொழிற்துறைகளை உருவாக்குவதற்கான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளைத் தென்மராட்சி பிரதேசச் செயலாளர் பூ. சுந்தரம்பிள்ளை மேற்கொண்டு வருகின்றார்.

கிராமத்திலுள்ள மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகள் மேற்கொள்ள விரும்புவர்களும், குடிசைக் கைத்தொழில்களை ஆரம்பிக்க விரும்புவோர்களும் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். 14

யாழ்ப்பாண

சமூக உருவாக்கமும்

விபுலானந்தரும்

நூலறிமுகமும், ஆய்வரங்கும்

29-03-92 ஞாயிறு மாலை 3 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சாளரம் வெளியீட்டாளர்கள்

03053

# விசர்நாய்க்கடி குறித்து ஆஸ்பத்திரியில் அறிவுரை

குடாநாட்டுப் பகுதியில் கடந்த மாதத்திலிருந்து நாய்க்கடிக்கு இலக்காகி தினமும் பலர் பாதிக்கப்பட்டு வருவதையடுத்து யாழ்பொது மருத்துவமனை வெளிநோயாளர் பகுதியில் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

★ உங்கள் வீடுகளில் வளர்கின்ற நாய்களுக்கு தவறாது தடுப்பூசி போட வேண்டும்.

★ உங்கள் ஊரில் சுற்றாடலில் நாய்கள் தேவையற்ற விதத்தில் இரவு பகல் நடமாடினால் அல்லது அதன் வித்தியாசமான போக்கை அவதானித்தால் உடன் அயலில் உள்ள சுகாதாரப் பகுதியினருக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

★ விசர்நாய் எனக் கருதப்பட்டால் சுகாதாரப் பரிசோதகர்களினால் அழிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

★ ஒருவருக்கு நாய் கடித்தால் நாயை கட்டி வைத்து விடுங்கள். பத்து நாட்கள் வரை கடித்த நாய் உயிரோடு இருக்கிறதா என்று கவனித்து வரவும்.

★ 10 நாட்களுக்குள் நாய் இறந்தால் உடனே பாதிக்கப்பட்டவர் வைத்தியசாலைக்குச் சென்று விசர் நாய்த் தடுப்பூசி மருந்தான ஏ.ஆர்.வி மருந்தினை போட்டுக்கொள்ளவும்.

★ தற்போது நாய்கள் வெயில் காலம் அதிகரித்துள்ளதனால் வெப்பம் தாங்காது வீதிகளிலும் ஒழுங்கைகளிலும் கட்டாக்காலிகளாகத் திரிகின்றன.

★ இந்த நாய்கள் வீதியால் செல்லும் பாடசாலை மாணவர்களையும் மற்றும் பாதசாரிகளையும் மிகமோசமாகக் கடித்து வருகின்றன.

★ இவ்விடயத்தில் மக்கள் கவனமாக இருக்க வேண்டும்.

★ உங்கள் நாய்களை வீட்டில் கட்டிவைத்து வளர்க்கவும். 07

## நாய்களுக்கு தடுப்பூசி

கோப்பாய் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 526 நாய்களுக்கு விசர் நாய் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். வருணநாதன் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி போடத் தவறிய நாய்களுக்கும் விரைவில் போடப்பட விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## அகதிகளுக்கு சட்டிபானை

புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாசாலை அகதிமுகாமில் இருக்கும் 46 குடும்பங்களுக்கு சட்டி பானைகள் செஞ்சிலுவைச் சங்க ஆவரங்கால் கிழக்கு கிளையால் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு குடும்பத்திற்கு 113 ரூபா பெறுமதியான சட்டி பானைகள் வழங்கப்பட்டுள்ளன. 06

## திடீர் இடமாற்றம்

யாழ்ப்பாணக் கோட்டக் கல்வி அலுவலகத்தில் காரியாலய உதவியாளராகக் கடமையாற்றிய செ. மட்றாஸ மயில் வேலணைக் கோட்டக் கல்வி அலுவலக காரியாலய உதவியாளராக உடனடியாக செயற்படும்படியாக இடமாற்றப்பட்டுள்ளார்

இவர் மிகக் குறுகிய காலமே யாழ் கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு மூளைத்தீவுக் கல்வித் திணைக்களத்திலிருந்து இடமாற்றப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது 15

## மெய்வல்லுநர் போட்டி

சுத்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தின் மெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் வே. சிவராசா தலைமையில் நடைபெற்றது

யாழ் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி வேலாயுதம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களைப் பாராட்டிப் பரிசில்களும் வழங்கினார்

திருத்தம்

24 - 03 - 1992 அன்று முரசொலி பத்திரிகையின் 6-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த யாழ்.மாநகரசபையின் பதல் வெற்றிடங்கள் விளம்பரத்தில் 29-03 92 என்றிருப்பதை 28 - 03 92 எனவும். ஆணையாளரின் பெயரை திரு வே பொ பாலசிங்கம் எனவும் திருத்திவாசிக்கவும் தவறுதலாக பிழையாக பிரசுரிக்கப்பட்டிருப்பதற்கு வருந்துகின்றோம்

# பருத்தித்துறைப்பகுதி மாவீரர்களுக்கு அஞ்சலி

மாசி, பங்குனி, மாதங்களில் வீரமரணம் அடைந்த பருத்தித்துறை பகுதியைச்சேர்ந்த மாவீரர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பருத்தித்துறை பழைய பஸ்நிலையத்தில் நடைபெற்றது

வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு அரசண்ணா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு விடுதலைப்புலிகள் சுடர் ஏற்றி வைத்தனர்.

பெற்றோர் உறவினர்கள் மலர் இட்டு அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்துவிடுதலைப்புலிகள் பிரமுகர்கள் உரையாற்றினர், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. 08

# தென்பகுதி விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம்

தென்பகுதியில் தற்போதைய வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது

இவர்களின் குடும்ப விவரங்களைச் சேகரிக்க அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர்!

வடக்கு கிழக்கு பகுதி விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்குவது பற்றி எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. 47

# கிளிநொச்சிப்பகுதியில் பொருள் விலை குறையவில்லை

கிளிநொச்சிப் பகுதிக்கு தற்போது லொறிகள் மூலம் உணவுப் பொருள்கள் தாராளமாக கொண்டுவரப்பட்டும் பொருள்களின் விலை குறையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தையும், கிளிநொச்சியையும் எடுத்துப் பார்க்கும் போது யாழ்ப்பாணத்தின் விலையில் 5 ரூபா அதிகமாகவே கிளிநொச்சியில் பொருள்கள் விலைப்படுகின்றன

இதற்கு காரணம் யாழ் மாவட்டத்திற்கு கப்பல் மூலமாகவும், லொறிகள் மூலமாகவும். தற்போது காங்கேசன் களஞ்சியத்தில் இருக்கும் உணவுப் பொருள்கள் எல்லாம் வந்துசேர்வதால் உணவுப் பொருள்களின் விலை வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகவும்,

ஆனால் கிளிநொச்சி மாவட்டத்திற்கு தரைவழியாக மட்டுமே உணவுப் பொருள்கள் கொண்டுவரப்படுவதால் போக்குவரத்து செலவையும் கணக்கெடுக்கும் போது உணவுப் பொருள்களின் விலை அதிகமாக காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. 47

# செஞ்சிலுவைச் சங்கத் தேர்தல் பிரசார வேலைகள் ஆரம்பம்

எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள யாழ் செஞ்சிலுவைச் சங்க கிளைத் தேர்தல் பிரசார வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

தற்போதைய நிர்வாகத்தின் செயற்பாடுகள் இப் பிரசாரத்தில் முக்கிய இடம்பெறுகின்றன.

பல லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட வானொலிநாடகப் பயிற்சி எதுவித பிரயோசனமும் அளிக்கவில்லை எனவும் பிரசாரத்தில் தெரிவிக்கப்படுகிறது

இதேபோல 'பதிரிகையாளர் பயிற்சி' ஆங்கிலத்தில் ஆரம்பிக்கப்பட்டதும் பயன்தரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் சில கிளைகளுக்கு நிவாரணப் பொருள்கள் தற்போது அனுப்பப்படுவதாக செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

சில வேட்பாளர்களின் கையெழுத்து போலியானது என்று ஆட்சேபனையும் எழுந்துள்ளதாகவும் சில வேட்பாளர்களைப் போட்டியில் இருந்து விலகுமாறு தூது அனுப்பப்படுவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (06

## பழுதடைந்த அரிசி மிருகங்களுக்கு உணவு

இறக்குமதியான 32 லட்சம் ரூபா பெறுமதியான 2753 மெற்றிக் தொன் பழுதான அரசி விலங்குகளுக்கு உணவாக பயன்படுத்தப்படவுள்ளதாக உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்கம் மல்லிமாரச்சி தெரிவித்தார்.

கடந்த ஆண்டு இலங்கையில் 18 மில்லியன் மெற்றிக் தொன் அரசி உற்பத்தி செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் சொன்னார்.

உலகக்கோப்பைக் கிரிக்கெட்

# இறுதியாட்ட நுழைவுச் சீட்டுகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்தன!

ஐந்தாவது உலகக்கோப்பைக் கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் இன்று மெல்பேர்னில் நடைபெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் இம்முறை பாகிஸ்தானும் இங்கிலாந்தும் மோதுகின்றன இறுதியாட்டத்தில் பாகிஸ்தான் இம்முறையே முதற்தடவையாக பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது இங்கிலாந்து மூன்றாம் முறையாக இறுதியாட்டத்தில் பங்குபற்றுகிறது.

இன்று நடைபெறவுள்ள இறுதியாட்டத்தை நேரில் காண 95 ஆயிரம் பார்வையாளர்கள் கூடுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அனைத்து நுழைவுச் சீட்டுக்களும் விற்று முடிந்து விட்டதாக அவுஸ்திரேலியச் செய்திகள் தெரிவிக்கின்றன

பகல், இரவு என நடைபெறவுள்ள இந்த இறுதியாட்டத்தில் மத்தியஸ்தர்களாக மேற்கிந்தியத்தீவுகள், நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் கடமைபுரிவர்.

இறுதியாட்டத்தில் பங்குபற்றும் இங்கிலாந்து அணி இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் அவுஸ்திரேலியா, ஸ்ரீலங்கா, தென்னாபிரிக்கா அணிகளை தோற்கடித்தது. பாகிஸ்தான் அணியுடனான ஆட்டம் மழையினால் குழம்பியது.

பாகிஸ்தான் அணி, சிம்பாவே, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஸ்ரீலங்கா அணிகளைத் தோற்கடித்த போதிலும் இந்தியா, தென்னாபிரிக்க அணிகளிடம் தோற்றது இங்கிலாந்துடனான ஆட்டம் மழையினால் குழம்பியது.

# பிறப்பு அத்தாட்சிப் படிவங்கள் கப்பலில் எடுத்துவரப்படவில்லை

பருத்தித்துறையை நேற்று முன்தினம் வந்தடைந்த குமண கப்பலில் பிறப்பத்தாட்சிப் படிவப் புத்தகங்கள் எதுவும் எடுத்துவரப்படவில்லை என யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

ஆனால் அண்மையில் யாழ் அரச அதிபர் கொழும்புடன் தொடர்பு கொண்டபோது இக்கப்பலில் யாழ். மாவட்டத்திற்குத் தேவையான ஒருதொகை பிறப்பத்தாட்சிப் படிவப் புத்தகங்கள் அனுப்பிவைப்பதாக அரச அதிபருக்கு கொழும்பில் இருந்து அறிவித்தல் வந்ததாகவும் செயலக வட்டாரம் தெரிவித்தது (47)

# காங்கேசன் களஞ்சியத்தில் சிப்பாய்களும் ஏற்றுகின்றனர்

காங்கேசன்துறை களஞ்சியத்தில் தற்போது பணிபுரிந்து வரும் சிங்களத் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் லொறிகளில் உணவுப் பொருள்களை ஏற்றுவதில் தாமதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சராசரி 10 லொறிகள் காங்கேசன்துறை சென்றுவருகின்றன. இதனால் இந்த தாமதத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு களஞ்சியத்தில் சிங்களத் தொழிலாளர்களுடன் இராணுவ சிப்பாய்களும் இணைந்து பொருள்களை ஏற்றுவதாக தெரிவிக்கப்படுகிறது. 47

# தபால் திணைக்களத்திலும் ஊழியர் பற்றாக்குறை

வடபிராந்திய தபால் திணைக்கள நிருவாக அலுவலகத்தில் ஊழியர் பற்றாக்குறையினால் பல வேலைகளை செய்ய முடியாத நிலையில் உள்ளதாகத் தெரியவருகிறது.

இவ்வலுவலகத்தில் பதினைந்துக்கு மேற்பட்ட உத்தியோகத்தர் வேலை செய்து வந்ததாகவும் இதில் பலர் சுயவிருப்பின் பேரிலும், மற்றும் ஓய்வு பெற்றும் சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

இப்பொழுது இத்திணைக்களத்தில் ஒரு உத்தியோகத்தரும், நிருவாக அதிகாரி மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது, 06

★ மகிந்த ராஜபக்ஸ எம், பியின்

# அடிப்படை உரிமை மீறல்வழக்கு ஜூன் 18 ஒத்திவைப்பு

அம்பாந்தோட்டை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம், பியான மகிந்த ராஜபக்ஸவின் அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது

1990 செப்டெம்பர் மாதம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இவர் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு இவரிடமிருந்த ஆவணங்கள் படங்கள் பறிக்கப்பட்டமை அடிப்படை மனித உரிமை மீறல் என்று இவ்வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது

ஜெனிவாவில் நடைபெற்ற காணாமற்போனோர் குறித்த மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக இவர் கட்டுநாயக்க விமான நிலையம் வந்தபோது இச்சம்பவம்நடைபெற்றது

இவரிடமிருந்து 552 ஆவணங்களும், 30 காணாமற்போனோர்களின் படங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டமை தெரிந்ததே 45

வன்னத்தில்—

இலேயே துடிதுடித்து உயிரிழந்தார்

இதனையடுத்து நாம் பலத்த சிரமத்தின் மத்தியில் அவ்விடத்தை விட்டு அகன்று கரையை அடைந்தோம் (15)

பல மோசடிகளில் சம்பந்தமாம்

# கொழும்பில் தமிழ் வர்த்தகரின் ஹோட்டல் ஒன்று மூடப்பட்டது

கொழும்பில் நற்சிரகத்தில் கலப்படம் செய்து மொத்தமாக விற்பனை செய்துவந்த தமிழ் வர்த்தகர் ஒருவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டார்,

துப்பு ஒன்று கிடைத்ததையடுத்து 4 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள இத்தமிழ் வர்த்தகரின் ஹோட்டலுக்கு பொலிசார் சென்றபோது ஹோட்டலுக்கும் அவர் இரகஸிய இணைப்பு மூலம் நீர் பெற்று வந்ததும், அறியப்பட்டதாம்

ஏற்கனவே இவர் மீது பல குற்றச் சாட்டுகள் இருந்ததாகவும். தெரிவிக்கப்படுகிறது

இவ்வர்த்தகரின்ஹோட்டலை மூடிவிடுமாறு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாரச்சி உத்தர விட்டார்.

# பாதயாத்திரைக்கு ஹிக்கடுவவில் வரவேற்பு

எதிர்க்கட்சியினரின் பாதயாத்திரை கடந்த சனிக்கிழமை ஹிக்கடுவவுக்குச் சென்றடைந்தபோது பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது

திருமதி சந்திரிகா குமாரணதுங்க ஹிக்கடுவவில் இருந்து இப்பாதயாத்திரையில் சேர்ந்து கொண்டார்.

வீதியெங்கும் நீல நிறக் கொடிகளும், சோடினைகளும் காணப்பட்டன. 66

# தேர்தல் ஆணையாளரை பதவி நீக்கக் ஆலோசனை

தேர்தல் ஆணையாளர் பதவியை நீக்கி அதற்குப் பதிலாக தேர்தல் ஆணைக்குழுவை நியமிப்பது குறித்து பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆராய்ந்து வருகிறது.

1989 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் குறித்து தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையை அரசு கூட்டத் தொடர் அறிக்கையாக வெளியிடவுள்ளது. 45

## மஹாராஜாவின் குளிர்பானங்கள்

மஹாராஜா நிறுவனம் இரண்டு புதிய குளிர் பானங்களை அறிமுகம் செய்துள்ளது.

அதன் ஏக விநியோகஸ்தர்களாகவும் அந்நிறுவனம் பிரகடனம் செய்துள்ளது

பெப்ஸி கோலா பிரிண்டா என்பனவே இந்த குளிர்பானங்களாகும் 22

## நட்வர்சிங் விருந்தில் ஜே. ஆர்.

முன்னாள் இந்திய வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங்கிற்கு கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர்என். என், ஜா இராபோசன விருந்து வைத்துக் கௌரவித்தார்.

இதில் முன்னாள் ஜனாதிபதி ஜே, ஆர்., லலித் காமினி குழு பிரமுகர்கள் உட்பட எதிர்க்கட்சிப் பிரமுகர்களும் கலந்துகொண்டனர் 06

## பெண்ணின் தலை

களனிப் பகுதியில் கறுப்பு நிறத் துணியினால் சுற்றப்பட்ட ஒரு பெண்ணின் தலையை பொலிஸார் கண்டெடுத்தனர். 06

மக்கள்...

இழக்கு) புகழ் உடல் நேற்று மந்திகையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் நவிண்டில் மாவீரர் துயிலும் மயானத்தில் தீயுடன் சங்கமமானது 08

மணலாறில்—

இய படையினர் ஏற்கனவே வைக்கப்பட்டிருந்த மிதிவெடிகளில் சிக்கினர் சுமார் 10 படையினர் இவ்வாறு நேற்று தமது காலை இழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலத்த சேதமடைந்தனர்

கடந்த ஒரு வாரமாக நடைபெற்ற மணலாறு நடவடிக்கையில் படையினருக்கு பலத்த உயிர்ச் சேதமும் பொருள் சேதமும் ஏற்பட்டிருந்தது. முதற்தடவையாக டாங்கி எதிர்ப்பு பீரங்கி ஒன்றையும் புலிகள் கைப்பற்றினர்.

தண்டர் ஸ்ரோம் தோற்றது

கடந்த வருடம் செப்டம்பர் மாதத்திலும் மணலாறில் ஸ்ரீலங்காப்படையினர் ஒபரேஷன் தண்டர் ஸ்ரோம் என்ற இராணுவ நடவடிக்கையை ஒருமாதகாலம் மேற்கொண்டு இறுதியில் பின்வாங்கிச் சென்றிருக்கின்ற மை நினைவிருக்கலாம்.

# லிபியாவின் போக்கிற்கு பிரான்ஸ், பிரிட்டன் வரவேற்பு

பான் அம், பிரெஞ் விமானங்கள் குண்டுவெடிப்பினால் தகர்க்கப்பட்டது குறித்து குற்றஞ்சாட்டப்பட்ட இரு லிபிய இரகஸிய பொலிஸாரையும் லிபியா அரபுலீக்கிடம் கையளிக்க முன்வந்ததை பிரான்சும் பிரிட்டனும் வரவேற்றுள்ளன

லிபியாவின் இந்த நடவடிக்கையினால் லிபியாவிற்கு எதிரா ஐநா பாதுகாப்புச் சபை கொண்டுவரவிருந்த தடையை தாமதப்படுத்த பிரான்சும் பிரிட்டனும் தயாராகவுள்ளன என அறிவிக்கப்பட்டது

( முன்வந்த செய்தி உள்ளே )

# ஜேர்மன் உல்லாசப்பயணிகள் வருகை வீழ்ச்சி

இலங்கைக்கு ஜேர்மனியிலிருந்து உல்லாசப்பயணிகள் வருவது வீழ்ச்சியடைந்துள்ளது.

1990 ஆம் ஆண்டு 59,000 உல்லாசப்பயணிகள் ஜேர்மனியிலிருந்து வந்தனர்,

ஆனால் 1991 ஆம் ஆண்டு 22 000 பேரே ஜேர்மனியிலிருந்து வந்தனர். இதற்கு இலங்கை பாதுகாப்பின்மையே காரணமென உல்லாசப்பயணிகள் கூறுவதாக உல்லாசப் பயணச்சபை நிர்வாக இயக்குநர் என். வி. டபிள்யூ சேபாலா தெரிவித்துள்ளார், 22

● ஆபத்து இல்லை என அறிவிப்பு

# ரஷ்யாவில் மீண்டும் அணு உலை விபத்து

ரஷ்யாவில் சென்பீற்றர்ஸ்பேர்க் (ஸ்ரலின்கிராட்) அருகிலுள்ள அணு உலை ஒன்றில் நேற்று கசிவு ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

கசிவு ஏற்பட்டதும் அது பெருகாமல் நிறுத்தப்பட்டுவிட்டதாகவும் எனினும் ஒரு தொகுதி அயடின் கலந்த அணுக்கதிர்வீச்சு புகைமண்டலம் காற்றில் கலந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

இப்புகை மண்டலம் வடக்காக நகர்ந்து பின்லாந்து நாட்டைநோக்கி செல்கிறது. இக்கதிர்வீச்சு கொண்ட புகை மனிதனின் தைரோயிட் சுரப்பியைத் தாக்கி கழுத்திற் புற்றுநோயை ஏற்படுத்தலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது

1985 இலும் இவ்வாறு சோவியத்தில செர்னோபில் அணு உலை விபத்து ஏற்பட்டது தெரிந்ததே

● தமிழகத்தில் சட்டம் வருகிறது

# சொத்துகளுக்குச் சேதம் ஏற்படின் கட்சித் தலைவரே பொறுப்பு

தமிழ் நாட்டில் அரசியல் கட்சிகள் நடத்தும் போராட்டங்களினால் பொதுச் சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டால் அக்கட்சியின் தலைவரே அதற்கான நஷ்ட ஈட்டைச் செலுத்த வேண்டும் என சட்டம் விரைவில் கொண்டுவரப்படவுள்ளது.

இத்தகவலை நேற்றுச் சட்டப்பேரவையில் வெளியிட்ட ஜெயலலிதா, கட்சித் தொண்டர்கள் வன்முறையில் ஈடுபட்டாலும் இதனை தூண்டிவிடுபவர்கள் கட்சித் தலைவர்களே என்பதால் இச்சட்டம் கொண்டுவரப்படுவதாகத் தெரிவித்தார்.

தமது ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் பாட்டாளி மக்கள் கட்சியும் தி. மு. கவுமே இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுவதாக ஜெயலலிதா குற்றஞ்சாட்டினார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்)லிமிற்றெற் திருவனந்தினரால் யாழ்கல்விளங்காடு டச்சவீதி'லஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 25-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது